**<u>திருவேற்காடு நகராட்சி</u>**
**<u>நகர்மன்ற அவசரக் கூட்டம்</u>**

**2020 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 05ம் நாள் திங்கட்கிழமை பிற்பகல் 02.00 மணிக்கு திருவேற்காடு நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் நகர்மன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.**

**நகராட்சி அலுவலகம்,**
**திருவேற்காடு**

**தனி அலுவலர் (ம) ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**

**நாள்: 05.10.2020**

---

## <u>பொருள் எண். 1</u>

திருவேற்காடு நகராட்சி தேர்வு நிலை நகராட்சியாகவும், சென்னை மாநகராட்சி எல்லைப்பகுதி ஒட்டியுள்ள நகராட்சி என்பதால் மாநகராட்சிக்கு இணையான பணிகளை மேற்கொள்வது கட்டாய கடமையாக உள்ளது. மேலும், இந்நகராட்சி தேர்வு நிலை நகராட்சியாக இருந்த போதிலும் இந்நகரம் பேரூராட்சியாக இருந்தபோது தோற்றுவிக்கப்பட்டுள்ள பணியிடங்கள் மட்டுமே தற்போது வரை உள்ளது. தேர்வுநிலை நகராட்சி வரைமுறைப்படி (Norms) இது நாள் வரையிலும் பணியிடங்களை தோற்றுவிக்கப்படவில்லை. இருப்பினும் நகராட்சிக்குண்டான பணிகள் அனைத்தும் குறைவான பணிணிளர்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருவதால், அரசிற்கும், உயர் அலுவலர்க்கும் மற்றும் நகர வாழ் பொது மக்கள் அன்றாட அத்தியாவசிய பணிகள் செய்துவதும் மற்றும் அரசினால் அவ்வப்போது அறிவிக்கப்படும் திட்டங்கள் நகராட்சிப் பணியாளர்களை ஈடுப்படுத்தி பணிகளை செய்வது அவசியமாகிறது. இதனால் நிர்வாக பணிகள் தாமதம் ஏற்பட வாய்ப்பாக அமைகிறது. மேலும், பணிக்கென கூடுதலாக பணியாளர்கள் இல்லாததால் பணிச்சுமை ஏற்படுகிறது. மேலும், நிர்வாக சிக்கல் ஏற்பட வாய்ப்பாக அமைகிறது. இந்நிலையில் நிர்வாக பணிகள் அவசியம் கருதியும் பணியாளர்கள் பற்றாக்குறையினால் நிர்வாக நடவடிக்கைகள் தாமதம் ஆவதை கருத்திக்கொண்டும் இந்நகராட்சியின் மேலாளர்/துப்புரவு ஆய்வர்/ நகரமைப்பு ஆய்வர்/ வருவாய் ஆய்வர் மற்றும் இதர அலுவலர்கள் தம் தம் பிரிவுகளின் பணிகளை உடனுக்குடன் செயலாக்கம் செய்யவும், பணிகளை சுணக்கமின்றி சிறப்பான முறையில் மேற்கொள்வதற்கும் ஒவ்வொரு பிரிவிற்கும் தட்டச்சு தெரிந்த புள்ளிவிவர குறிப்பாளர்கள் தேவைப்படுவதாகவும் பணியமர்த்தி வழங்குமாறு தற்போது குறிப்புரைகளில் கேட்டுக் கொண்டுள்ளனர். இதனை மேற்கொண்டு நிர்வாக பணிகள் அவசியம் என்பதாலும், சீராக நிர்வாக நடைபெறுவதற்கு ஏதுவாக நிர்வாக நலன் கருதியும், சம்மந்தப்பட்ட பிரிவு அலுவலர்களின் குறிப்பின்படியும் கீழ்குறிப்பிட்டுள்ள பிரிவுகளுக்கு தட்டச்சு தெரிந்த புள்ளிவிவரக் குறிப்பாளர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் தினக்கூலி ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ள விலைவிகித அடிப்படையில் வெளிகொணர்வு முறையில் (Out Sourcing)மேற்படிய பணியாளர்களை மகளிர் சுய உதவிக்குழுவிற்கு முன்னுரிமை அளித்து தருவித்துக் கொள்ளவும், இதற்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | பொது சுகாதாரப் பிரிவு | – | 1 |
| 2. | வருவாய் பிரிவு | – | 1 |
| 3. | பொதுப்பிரிவு | – | 1 |
| 4. | நகராமைப்பு பிரிவு | – | 1 |
| 5. | பொறியியல் பிரிவு | – | 1 |
| | **மொத்தம்** | | **5** |

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1251** **நாள்.05.10.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண். 2

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளிலும் தினசரி பொது சுகாதாரம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேலும், பொது மக்களிடையே கொரோனா வைரஸ் மற்றும் டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகாக விழிப்புணர்வு ஏற்படும் வகையில், நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை–28 மற்றும் நகராட்சிகள் மண்டல நிர்வாக இயக்குனர் செங்கற்பட்டு மண்டலம் அவர்களின் கொரோனா வைரஸ் மற்றும் டெங்கு நோய் தடுப்பு பல்வேறு ஆய்வு கூட்ட அறிவுரையின்படியும் கொரோனா வைரஸ் மற்றும் டெங்கு நோய் தடுப்பு குறித்த வாசகங்கள் அடங்கிய **கணக்கெடுப்பு படிவங்கள், கொரோனா வைரஸ் தொடர்பாகவும் டெங்கு விழிப்புணர்வு பிரசுரங்கள், ஸ்டிக்கர், மருத்தவமுகாம் பேனர்கள் அபராதம் விதிக்கும் பேனர்கள், கன்டெய்ன்மெண்ட் ஜோன் பேனர்கள், நோட் குறிப்புகள் போன்றவை** அச்சடித்து வழங்க தற்போது மத்திய மாநில அரசுகளின் 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரிட தற்போது வழிவகை இல்லை. மேலும், நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் அதிகரித்து வருவதாலும், மற்றும் பருவகால மாறுபாட்டினால் பெய்துவரும் மழையினால் டெங்கு கொசுப்புழுக்கள் உற்பத்தி ஆகும் காலமாக உள்ளதாலும், பணியின் அவசர அவசியத்தை கருதி விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொண்டமைக்கும் மற்றும் இதற்கென ஆகும் தோராய செலவினம் ரூ.9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கும் மற்றும் தகவலுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1252 நாள்.05.10.2020**

**தீர்மானம் : அ (ம) ஆ அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண். 3

இந்நகராட்சியில் கொரோனா வைரஸ் தொற்று நோய் வேகமாக பரவுவதை தடுக்கவும் பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த **கணக்கெடுப்பு படிவங்கள், கொரோனா வைரஸ் தொடர்பாகவும் டெங்கு விழிப்புணர்வு பிரசுரங்கள், ஸ்டிக்கர், மருத்தவமுகாம் பேனர்கள் அபராதம் விதிக்கும் பேனர்கள், கன்ம்டெய்ன்மெண்ட் ஜோன் பேனர்கள், நோட் குறிப்புகள் போன்றவை** நோட்டீஸ் அச்சடித்து வழங்க விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் ஒப்புநோக்கு பட்டியல் ஆணையர் அவர்களின் தகவலுக்கும் மற்றும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | பேனர் விபரம் | SVN Enterprises | Arun Kumar civil Contractors & Suppliers | G.Mathivelan Contractor & Suppliers |
|---|---|---|---|---|
| 1 | இறுதி அறிவிப்பு நோட்டீஸ் பில்புக் 1+1=2 கலர்ஸ் ஒரு எண்ணிக்கை | ரூ.275/– | ரூ.280/– | ரூ.305/– |
| 2 | கோவிட்–19 முன்னெச்சரிக்கை தடுப்பு அபராத கட்டணம் பில்புக் 1+1=2 கலர்ஸ் ஒரு எண்ணிக்கை | ரூ.140/– | ரூ.200/– | ரூ.180/– |
| 3 | கோவிட்–19 முககவசம் அபராத கட்டணம் பில்புக் ஒரு எண்ணிக்கை | ரூ.160/– | ரூ.180/– | ரூ.210/ |
| 4 | கோவிட்–19 வைரஸ் விழிப்புணர்வு 4 டிஜிட்டல் பேனர் 1 முதல் 18 வார்டு விளம்பர பேனர்கள் | ரூ.185/– | ரூ.290/– | ரூ.380/– |

மேற்படி பட்டியலின்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனமான **SVN Enterprises** நிறுவனத்தின்

விலைப்புள்ளியினை ஏற்று மற்றும் பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கும் மற்றும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1253** **நாள்.05.10.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண். 4

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட குடியிருப்பு பகுதிகளில் சாலைகள் பழுதடைந்துள்ளதால் போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் இடையூறாக உள்ளது. அதன்படி பழுதடைந்த சாலைகளை செப்பனிட்டு சீர்செய்யவும் அதற்காக சிப்பங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | சிப்பம் எண் | வார்டு எண். | பணியின் விபரம் | நீளம் (கி.மீ) | அகலம் (மீ) | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| 1. | I | 1 & 4 | பாலாஜி நகர், தினேஷ் நகர், காந்தி தெரு, திருவள்ளூர் தெரு, செந்தில் நகர், மாசிலாமணி தெரு, மயான சாலை, ஐஸ்வர்யா நகர் 1வது பிரதான சாலை, 2வது பிரதான சாலை, 3வது பிரதான சாலை, 1வது தெரு, 2வது தெரு, 3வது தெரு, 4வது தெரு, 6வது தெரு மற்றும் ஜோதி நகர் பகுதிக்கு தார்தளம் புதுப்பித்தல். | 3.786 | 4.10 – 5.50 | 140.00 |
| 2. | II | 3, 4 & 5 | கீழ்அயனம்பாக்கம் சேவைச் சாலைக்கு மற்றும் தமிழ் தெருவிற்கு தார்தளம் மற்றும் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல். கக்கன்ஜி தெரு, கேலக்ஸி பிரதான சாலை, 1வது தெரு மற்றும் குறுக்கு தெருவிற்கு தார்தளம் அமைத்தல். | 1.456 | 4.10 – 5.50 | 140.00 |
| 3. | III | 6, 7 & 10 | வி.ஜி.என் மகாலட்சுமி நகர் பிரதான சாலை, 1வது பிரதான சாலை, 4வது பிரதான சாலை, 6வது பிரதான சாலை, 7வது பிரதான சாலை, நந்தகுமார் தெரு, வடநூம்பல் பிள்ளையார் கோயில் தெரு, கேந்திரிய விஹார், ராஜீவ் நகர் வெள்ளாளர் தெரு, பிள்ளையார் கோயில் தெரு, எம்.ஜி.ஆர் தெரு, காந்தி தெரு மற்றும் பொன்னியம்மன் கோயில் தெருவிற்கு தார்தளம் புதுப்பித்தல். | 3.332 | 4.10 – 8.00 | 140.00 |
| 4. | IV | 15 | ஸ்ரீதேவி நகர் 1வது, 2வது, 3வது மற்றும் 4வது தெருவிற்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் பேவர் பிளாக் சாலை அமைத்தல். | 0.765 | 4.10 | 140.00 |
| 5. | V | 7,15, & 16 | மகாலட்சுமி நகர் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் தார்தளம் | 1.550 | 6.00 – 8.00 | 140.00 |

| வ. எண் | சிப்பம் எண் | வார்டு எண். | பணியின் விபரம் | நீளம் (கி.மீ) | அகலம் (மீ) | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| | | | அமைத்தல், சிவன் கோயில் பிரதான சாலைக்கு தார்தளம் புதுப்பித்தல் மற்றும் காடுவெட்டி மேட்டுப்பாளையம் சாலையினை அகலப்படுத்தி தார்தளம் அமைத்தல். | | | |
| | | | **மொத்தம்** | **10.889** | | **700.00** |

**அலுவலக குறிப்பு :–**

அ) ஒப்புதல் அளிக்கலாம்.

ஆ) மேற்படி பணிகளை ரூ.700.00 இலட்சம் மதிப்பீட்டில் சிறப்பு சாலை திட்டம் 2020–21 ஆண்டின் கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு கோரி கருத்துருவினை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–28 அவர்களுக்கு அனுப்பிடவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1254 நாள்.05.10.2020**

**தீர்மானம் : அ (ம) ஆ அனுமதிக்கப்படுகிறது.**

---

## பொருள் எண். 5

திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்கு புதியதாக குடிநீர் குழாய் இணைப்பு வழங்குதல் குறித்தான வரைவு துணை விதிகளுக்கு நகர்மன்ற தீர்மான எண்.383, நாள்.28.05.2018–ன்படி ஒப்புதல் அளித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கீழ்க்காணும் குடிநீர் விநியோகத்திற்கான குடிநீர் கட்டணங்கள் மற்றும் வைப்புத் தொகையினை நிர்ணயம் செய்து பொது அங்கீகாரம் வழங்கியதைத் தொடர்ந்து குடிநீர் துணை விதிகளை மாவட்ட அரசிதழில் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) வெளியிடப்பட்டதில் ஆட்சேபனைகள் ஏதும் பெறப்படவில்லை.

| வ. எண் | உபயோகம் | உத்தேசிக்கப்பட்டுள்ள வைப்புத் தொகை விபரம். (ரூ.) | உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டண விபரம் மாதம் 1க்கு (ரூ.) |
|---|---|---|---|
| 1. | குடியிருப்பு உபயோகம் | 5000/– | 150/– |
| 2. | வணிகம் உபயோகம் | 10000/– | 300/– |
| 3. | தொழிற்சாலை உபயோகம் | 15000/– | 450/– |

மேலும், ஒவ்வொரு ஆண்டிற்கும் 5%-க்கும் குறையாமல் குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத் தொகை உயர்த்தி வசூலிக்கப்படவேண்டும் எனவும், புதிய குடிநீர் இணைப்புகளுக்கான குடிநீர் கட்டணம் ஏற்கனவே அமுலில் உள்ள குடிநீர் இணைப்புகளுக்கு பொருந்தும் என நிபந்தனையுடன் இறுதி அங்கீரம் (Final Approval) பெற கருத்துருவினை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பிடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1255 நாள்.05.10.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 6

திருவேற்காடு நகராட்சியில் பொது சுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. இந்நகராட்சியில் உள்ள 18 வார்டுகளில் 1 இலட்சம் மக்கள் தொகை கொண்ட இந்நகரில் 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 22291 வீடுகள் உள்ளன. தற்சமயம் 26000 முதல் 30000 வீடுகள் இந்நகரில் இருக்கும் என்று தோராய கணக்கெடுப்பில் தெரியவருகிறது. தற்போது மழைக்கலாம் ஆரம்பமாகி இருப்பதால் மழைநீர் தேங்கி தேவையற்ற பொருட்கள் மற்றும் நீர் தேங்கியுள்ள இடங்களில் கொசுப்புழுக்கள் அதிகமாக உற்பத்தியாகும் என்பதால் புகைபோக்கி இயந்திரம் மூலம் கொசுப்புழு தடுப்பு மருந்து அடிக்க வேண்டியுள்ளது. மேலும், நகராட்சி பகுதியில் டெங்கு தொற்றுநோய் பரவாமல்

தடுக்க நகராட்சி பகுதி முழுவதும் **கொசுப்புழுக்களை அழிக்கும் பைரேத்திரியம் மற்றும் அபேட்** கிருமி நாசினி போதிய அளவு இருப்பு வைக்க நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் நகராட்சி மண்டல நிர்வாக இயக்குனர், மற்றும் துணை இயக்குனர், பொது சுகாதாரம் திருவள்ளூர், ஆகியோரின் அறிவுரைகளின்படி சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளவும், நகராட்சியில் போதிய அளவு **பைரேத்திரியம் மற்றும் அபேட் கிருமி நாசிளி** இருப்பு இல்லாததாலும் மத்திய, மாநில அரசுகளின் 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் பணியின் அவசர அவசியத்தை கருதியும், டெங்கு தொற்று நோய் பரவும் காலமாக உள்ளதாலும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் அரசு நிறுவனங்கள் அல்லது அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் கொள்முதல் செய்து பணிகள் மேற்கொள்ள நகராட்சி ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, **பைரேத்திரியம் 300 லிட்டர் மற்றும் அபேட் 250 லிட்டர்** கொள்முதல் செய்து பணிகள் மேற்கொண்டமைக்கு இதற்கான செலவினம் ரூ.5.80 இலட்சத்திற்கு வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் பதிவிற்கும் மற்றும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.
(ந.க.எண்.4135/2020/H1)

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1256** **நாள்.05.10.2020**

**தீர்மானம் : அ (ம) ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 7

இந்நகராட்சியில் கொரோனா நோய் தொற்று பாதிப்பு அடைந்தவர்களின் வீடுகள் மற்றும் அப்பகுதி முழுவதும் காலை, மாலை என இரு வேளைகளில் கிருமி நாசினி தெளிக்க டிராக்டருடன் கூடிய கிருமி நாசினி இயந்திரத்தில் மின் மோட்டார் மற்றும் ஜெனரேட்டர் பொறுத்தி விரைந்து கிருமி நாசினி தெளிக்க தனியார் மூலம் மின் மோட்டார் மற்றும் ஜெனரேட்டர் தினசரி நாள் வாடகை அடிப்படையில் அமர்த்தி பணிகள் மேற்கொள்ள விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் தகவலுக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | பணியின் விவரம் | தொகை |
|---|---|---|---|
| 1. | Srinivas Genset Motor<br>No. 171/59, Sri Devi Karumariamman Nagar, Sivan Kovol Road, Thiruverkadu, Chennai-77. | கொரோனா வைரஸ் நோய் தொற்று பாதித்த இடங்களில் மற்றும் அப்பகுதி முழுவதும் டிராக்டர் வாகனத்தில் டேங்கர் அமைத்து மின் மோட்டார் மூலம் கிருமி நாசினி தெளிக்க மின் மோட்டார் பொறுத்துதல் –பணிக்கு | ரூ.2000/– |
| 2. | S.S.M.M Genset Motor,<br>N0.17/25, Thambuswamy Nagar, Sivan Kovil Road,Thiruverkadu, Chennai-77. | | ரூ.2400/– |

மேற்படி பட்டியலின்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனமான Srinivas Genset Motor நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) திருவேற்காடு நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1257** **நாள்.05.10.2020**

**தீர்மானம் : அ (ம) ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 8

இந்நகராட்சியில் கொரோனா வைரஸ் தொற்று நோய் வேகமாக பரவுவதை தடுக்கவும் பொது மக்களுக்கு கபசுர குடிநீர் வழங்கிட விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் ஆணையர் அவர்களின் தகவலுக்கும் மற்றும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | பணியின் விவரம் | எண்ணிக்கை | தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1 | J.J Enterprises<br>No. 23,Andavar Nagar,<br>Thiruverkadu, Chennai-77. | திருவேற்காடு நகராட்சியில் உள்ள 18 வார்டுகளிலும் கொரோனா வைரஸ் நோய் தொற்று கட்டுப்படுத்திட பொது மக்களுக்கு கபசுர குடிநீர் 3 மணிநேரத்திற்குள் வழங்கிட இப்பணிக்கு ஒரு ஆட்டோவை பணி அமர்த்தும் பணிக்கு. | 1 ஆட்டோவில் கபசுர குடிநீர் டிரம்முகள் வைத்து அனைத்து பகுதிகளுக்கும் விநோகித்தல் (அனைத்து செலவுகள் உள்பட ) | 1000/– |
| 2. | S.G Transport ,<br>No.13, Kanaga Durga Nagar,Thiruverkadu,<br>Chennai-77. | | | 1100/– |
| 3. | Dhivadharshan Transport ,<br>No.25, Kanaga Durga Nagar,<br>Thiruverkadu, Chennai-77. | | | 1200/– |

மேற்படி பட்டியலின்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனமான **J.J Enterprises** நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று மற்றும் பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1258** **நாள்.05.10.2020**

**தீர்மானம் : அ (ம) ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 9

இந்நகராட்சியில் கொரோனா வைரஸ் நோய் தொற்றினை தடுக்கும் பொருட்டு நகராட்சி அலுவலகத்திற்கு வந்து செல்லும் பொது மக்கள் மற்றும் அரசு அலுவலர்கள், பணியாளர்கள் அலுவலகத்திற்குள் நுழையும்போது கொரோனா தொற்று பரவாமல் இருக்கவும் தனியாக பாதை அமைத்து **(சுரங்கப்பாதை)** அவ்வழியாக வந்து செல்வோர் மீது லைசால் தெளித்து இரு கைகளும் உயர்த்தி வந்து செல்ல சுரங்கப்பாதை அமைக்க 6 மீட்டர் நீளம் 3 அடி அகலம் உள்ள வகையில் சுரங்கப்பாதை அமைக்க பணிகள் மேற்கொள்ள விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் தகவலுக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | பணியின் விவரம் | தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 1. | J.J. Enterprises<br>No.23, Andavar Nagar,<br>Thiruverkadu, Chennai-77 | திருவேற்காடு நகராட்சியில் கொரோனா வைரஸ் நோய் தொற்று பரவாமல் தடுக்க நகராட்சி அலுவலகத்தில் பொது மக்கள், பணியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கைகள் உயர்த்தி வந்துசெல்லும் போது கிருமி நாசினி தெளிக்க 6 மீட்டர் நீளம் 3 அடி அகலம் உள்ள வகையில் சுரங்கப்பாதை அமைக்கும் பணிக்கு. | 80,000/– |
| 2. | Magesh Stage Works,<br>No.126, Perumal Kovil Street,<br>Vadanoomabal, Thiruverkadu,<br>Chennai-77 | | 85,000/– |
| 3. | Arun Stage Decorators<br>No.155/102, Veampuli Amman Kovil Street, Vanagaram Main Road, Chennai-77. | | 95,000/– |

மேற்படி பட்டியலின்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனமான J.J.Enterprises உரிமையாளர் திரு.Janagamaharajan அவர்களின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1259 நாள்.05.10.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 10

இந்நகராட்சியில் கொரோனா வைரஸ் தொற்று நோய் வேகமாக பரவுவதை தடுக்கவும் பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும், நோய் தடுப்பு வாசங்கள் 3 ஆட்டோக்களில் விளம்பரம் செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பதிவிற்கும் மற்றும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | பணியின் விவரம் | எண்ணிக்கை | தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1 | Dhivadharshan Transport No. 25, Kanaga Durga Nagar, Thiruverkadu, Chennai-77. | நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டுகளிலும் கொரோனா வைரஸ் தடுப்பு விழிப்புணர்வு அரசு வழிக்காட்டுதலின் படி முககவசம் அணிதல், சமூக இடைவெளி பின்பற்றுதல் கைகளை சோப்பு கரைசல் கொண்டு கழுவுதல் ஆகிய நோய் தடுப்பு வாசகங்கள் பொதுமக்களிடையே விளம்பரம் செய்தல் | நாள் ஒன்றுக்கு ஒரு ஆட்டோ ஒன்றுக்கு அனைத்து செலவுகள் உள்பட | 1200/– |
| 2. | S.G Transport, No. 13, Kanaga Durga Nagar, Thiruverkadu, Chennai-77. | | | 1100/– |
| 3. | J.J Enterprises, No.23, AndavarNagar, Thiruverkadu , Chennai-77. | | | 1000/– |

மேற்படி பட்டியலின்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனமான **J.J Enterprises** நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று மற்றும் பணி உத்திரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு மற்றும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) திருவேற்காடு நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் பதிவு செய்து அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1260 நாள்.05.10.2020**

**தீர்மானம் : அ) அனுமதிக்கப்பட்டது. ஆ) அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 11

திருவேற்காடு நகராட்சியில் 2020–2021 –ம் ஆண்டிற்கான பொது சுகாதாரப் பணிகள் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. மேலும், இந்நகராட்சியில் உள்ள 18 வார்டுகளிலும் வீடுகள் தோறும் விடுதலின்றி குப்பைகள் மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் என தரம் பிரித்து சேகரம் செய்யப்படுகிறது. மேற்படி சேகரம் செய்யப்படும் குப்பைகள் முதல் நிலையிலேயே நகராட்சி உரக்கிடங்கிற்கு எடுத்து செல்லப்பட்டு உரம் தயாரிக்கப்படுகிறது. மேலும், உரம் தயாரிக்க தேவையான உதிரிப் பொருட்கள் உமி, தவுடு, வெல்லம், தயிர் ஆகியவை உபயோகப்படுத்த வேண்டி உள்ளதால், மேற்படி உரம் தயாரிக்க தேவைப்படும் உதிரிப் பொருட்கள் பணியின் அவசர அவசியம் கருதி பணிகள் மேற்கொள்ள ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, ஏற்கெனவே, பெறப்பட்ட விலைவிகிதத்தின்படியே கொள்முதல் செய்து பணிகள் மேற்கொள்ளவும், இதற்கான தோராய

செலவினம் ரூ.4.50 இலட்சத்திற்கு வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. **(ந.க.எண்.2283/2020/எச்1)**

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1261** **நாள்.05.10.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 12

இந்நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் நோய் தொற்றினை கட்டுப்படுத்திட **நீர்த்த சுண்ணாம்பு** கொரோனா பாதித்த பகுதிகளில் தெளிக்கவும் **நீர்த்த சுண்ணாம்பு** சப்ளை செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் தகவலுக்கும் மற்றும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | பணியின் விவரம் | கொள்ளளவு | தொகை |
|---|---|---|---|---|
| 1. | RSR Enterprises<br>No. 9/118, old Gst Road,<br>Thilagavathy Nagar, Irumpuliyur,<br>East Tambaram, Chennai- 600059. | பொது சுகாதாரம் கொரோனா பாதித்த பகுதிகளில் கிருமி நாசினி தெளிக்க சுண்ணாம்பு நீர் சப்ளை செய்தல் | 1 கிலோ +GST உள்பட | ரூ.15/– |
| 2. | Balaji Associates<br>No. 208, Perumal Kovil street,<br>Irumpuliyur West Tambaram<br>Chennai -600045. | | 1 கிலோ +GST உள்பட | ரூ.21/– |
| 3. | Kiruthik Associates<br>No. 13/3 Dharmathottam Street ,<br>Irumpuliyur, West Tambaram<br>Chennai - 600045. | | 1 கிலோ +GST உள்பட | ரூ.24/– |

மேற்படி பட்டியலின்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனமான RSR Enterprises நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கும் மற்றும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1262** **நாள்.05.10.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 13

திருவேற்காடு நகராட்சி கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக பொதுமக்கள் கூடும் இடங்களான, பேருந்து நிலையம், அடுக்குமாடி குடியிருப்பு, மார்க்கெட் சந்திப்பு, அம்மா உணவகம் மற்றும் மக்கள் அதிகம் கூடும் இடங்கள் மேலும், கொரோனா நோயினால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டவர்கள் மற்றும் அப்பகுதியை சுற்றியுள்ள பொது மக்களுக்கு தினசரி கபசுர குடிநீர் சூரணம் வழங்குவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் கொரோனா வைரஸ் தடுப்பு கண்காணிப்பு அலுவலர், திருவள்ளூர் மாவட்டம், மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகளின்படி, கபசுர குடிநீர் பொதுமக்களுக்கு வழங்கிட அறிவுறுத்தப்பட்டதை தொடர்ந்து, தினசரி நகராட்சியில் உள்ள பொது மக்களுக்கு கபசுர குடிநீர் சூரணம் வழங்கிட Tea cup 1280 பண்டல்கள் வாங்கி பயன்படுத்திட பணியின் அவசர அவசியம் கருதியும், உள்ளூர் நிறுவனங்களிடம் இருந்து வாங்கி பணிகள் மேற்கொள்ள ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, உள்ளூர் நிறுவனத்தில் கொள்முதல் செய்தமைக்கும் மற்றும் இதற்கான ஆகும் செலவினம் ரூ.64,000/– வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1263** **நாள்.05.10.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## <u>பொருள் எண். 14</u>

இந்நகராட்சி பகுதியில் தினசரி சேகரம் செய்யப்படும் மக்கும் மற்றும் மக்காத மறுசுழற்சி செய்ய இயலாத கழிவுகளை சேகரம் செய்வதற்கு 5 எண்ணிக்கையில் டிராக்டர் வாகனம் சப்ளை செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகள் ஆணையர் அவர்களின் தகவலுக்கும் மற்றும் முடிவிற்கும்.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | பணியின் விவரம் | எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|---|
| 1. | என். செல்வராஜ் எண்.25, சாஸ்திரி தெரு, கீழ் அயனம்பாக்கம், சென்னை—75. | திருவேற்காடு நகராட்சி பகுதியில் தினசரி குடியிருப்புகள், தொழிச்சாலைகள், வணிக வளாகங்கள், பேருந்து நிலையம் மற்றும் சந்தை பகுதிகளில் தினசரி மக்கும் மற்றும் மக்காத கழிவுகளை சேகரம் செய்ய 5 எண்ணிக்கையில் டிராக்டர் வாகனங்கள் சப்ளை செய்தல் | 1 வாகனத்திற்கு நாள் ஒன்றுக்கு அனைத்து செலவுகள் உள்பட | ரூ.2050/— |
| 2. | பி. சந்திரன் எண்.27,அன்னை தெராசா தெரு, கோல்டன் ஜார்ஜ் நகர், நெற்குன்றம், சென்னை—77. | | 1 வாகனத்திற்கு நாள் ஒன்றுக்கு அனைத்து செலவுகள் உள்பட | ரூ.2200/— |

மேற்படி பட்டியலின்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை வழங்கிய **என். செல்வராஜ்** என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றப்பொருள் அனுமதிக்கும் மற்றும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1264** **நாள்.05.10.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## <u>பொருள் எண். 15</u>

திருவேற்காடு நகராட்சியில் 2020—2021 ஆம் ஆண்டு பொது சுகாதாரப் பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை மேம்படுத்தும் வகையில் கீழ்குறிப்பிட்டுள்ள பணிகளை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டியும் ஒப்பந்தபுள்ளிகள் கோரவும், இப்பணிகளுக்கான செலவினங்கள் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் விவரம் | உத்தேச செலவினம் (இலட்சத்தில்) | பணி முடிக்கும் காலம் |
|---|---|---|---|
| அ. | பொது சுகாதாரப் பணிகள் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் முதல்நிலை சேகரிப்பு பணிகளுக்காக வேலப்பன்சாவடி முதல் திருவேற்காடு பேருந்து நிலையம் வரை வானகரம் முதல் ACS மருத்துவமனை வரை உள்ள பிரதான சாலைகள் மற்றும் திருவேற்காடு பேருந்து நிலையம் முதல் சிவன் கோவில் வரை உள்ள சாலை மற்றும் தேரோடும் வீதி முதல் கோலடி வரை உள்ள சாலைகளில் உள்ள கழிவுகள், குப்பைகள் மற்றும் மணல் மேடுகள் அப்புறப்படுத்த தினசரி 5 டிராக்டர் வாகனங்கள் சப்ளை செய்தல் பணிக்கு (ந.க.எண்.**3582/2020/எச்1**) | ரூ. 9.20 | 3 மாதங்கள் |

| | | | |
|---|---|---|---|
| ஆ. | திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள பிரதான சாலைகளான வேலப்பன்சாவடி முதல் திருவேற்காடு பேருந்து நிலையம் வரை உள்ள சாலை மற்றும் திருவேற்காடு பேருந்து நிலையம் முதல் சிவன் கோயில் வரை உள்ள பிரதான சாலைகளில் இருப்புறங்களிலும் உள்ள குப்பைகள் பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் மணல் மேடுகள் அப்புறப்படுத்தவும் மேலும் பிரதான சாலைகளை தூய்மையாக பராமரிக்கவும் தினசரி 15 பணியாளர்களை வெளிக்கொணர்வு முறையில் (out sourcing) ஒப்பந்த அடிப்படையில் சப்ளை செய்யவும் மேலும் மேற்படி பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திருவள்ளூர் அவர்கயின் தினசரி ஊதிய விகித நிர்ணயப்படி ஊதியம் வழங்கவும் மேற்படி பணிக்கு ஒப்பந்த புள்ளி கோரவும் மற்றும் இதற்கான செரவினத்திற்க பொதுநிதியிலிருந்து செரவிளம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்க பொருள் வைக்கப்படுகிறது. **(ந.க.எண். 1136/2020/எச்1)** | ரூ.9.10 | 5 மாதங்கள் |
| இ. | திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள பிரதான சாலைகளான வானகரம் முதல் ACS மருத்துவமனை வரை மற்றும் தேரோடும் வீதி முதல் கோலடி வரை உள்ள பிரதான சாலைகளில் இருப்புறங்களிலும் உள்ள குப்பைகள் பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் மணல் மேடுகள் அப்புறப்படுத்தவும் மேலும் பிரதான சாலைகளை தூய்மையாக பராமரிக்கவும் தினசரி 15 பணியாளர்களை வெளிக்கொணர்வு முறையில் (out sourcing) ஒப்பந்த அடிப்படையில் சப்ளை செய்யவும் மேலும் மேற்படி பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திருவள்ளூர் அவர்கயின் தினசரி ஊதிய விகித நிர்ணயப்படி ஊதியம் வழங்கவும் மேற்படி பணிக்கு ஒப்பந்த புள்ளி கோரவும் மற்றும் இதற்கான செரவினத்திற்க பொதுநிதியிலிருந்து செரவிளம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்க பொருள் வைக்கப்படுகிறது. **(ந.க.எண். 1136/2020/எச்1)** | ரூ.9.10 | 5 மாதங்கள் |

**<u>அலுவலக குறிப்பு:</u>**

அ. அ) ஆ) இ) ஆகிய மூன்று பணிகளுக்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.

ஆ. மூன்று பணிகளுக்கும் தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும், ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விளம்பரத்தினை தினசரி நாளிதழில் வெளியிடவும், பணிகளுக்கான செலவினங்களை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1265 நாள்.05.10.2020**

**தீர்மானம் : அ (ம) ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## <u>பொருள் எண். 16</u>

திருவேற்காடு நகராட்சியில் பொது சுகாதார பிரிவில், துப்புரவு பணிகளை, தினசரி சேகரமாகும் திடக்கழிவுகளை, முதல்நிலை சேகரிப்பு வாகனமான Battery operatated Vehicle கள் உபயோகப்படுத்தப்படுகிறது. தற்சமயம் 33 Bov–க்கள் திருவேற்காடு நகராட்சியில் பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேற்படி Bov–க்கள் செயல்பட பேட்டரியினை தினசரி Battery Charger–களை கொண்டு ஒவ்வொரு வண்டியாக Charge செய்ய வேண்டியுள்ளது. எனவே, பணியின் அவசர அவசியம் கருதி பொது சுகாதார பிரிவில் உள்ள Bov–க்களுக்கு தேவையான 20 நம்பர் சார்ஜர் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 – ன் கீழ் வாங்கி வழங்க துப்புரவு ஆய்வாளர் 14.10.2020 தேதிய குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள தாமதம் ஆகும் என்பதாலும், பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள நகராட்சி ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொண்டமைக்கும் மற்றும் இதற்கென ஆகும் தோராய செலவீனம் ரூ.1.00 இலட்சத்திற்கு வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1266** **நாள்.05.10.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## <u>பொருள் எண். 17</u>

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளிலும் தினசரி பொது சுகாதாரம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. நகராட்சியில் மொத்தம் 939 தெருக்கள் அமைந்துள்ளன. 28.50 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட தேர்வு நிலை நகராட்சியாகும் வர இருக்கும் வடகிழக்கு பருவ மழை காலத்தினை ஒட்டி முன்னேற்பாடுகள் செய்ய வேண்டியுள்ளது. திருவேற்காடு நகராட்சியில் வார்டு எண். 12,13,14,15,17 வார்டுகளில் உள்ள மழைநீர் கால்வாய்களில் மண்சேர்ந்து தூர்வாரும் நிலையில் உள்ளது. மேலும், வார்டு எண்.5,6,16,18 களில் உள்ள மழைநீர் கால்வாய்களும் தூர்வாரப்பட வேண்டும். அதிலும் குறிப்பாக 12,13,14,15 மற்றும் 17 வார்டுகளில் உள்ள மழைநீர்க்கால்வாய்கள், பள்ளமான இடத்தில் அமைந்துள்ளதால், சாதாரண மழைக்கே, மழைநீர்க்கால்வாய்களில் ஏற்கனவே தூர்வாரப்படாததால் வீடுகளில் மழைநீர் உட்புகுந்து பொதுமக்களுக்கு மிகுந்த சிரமத்தை ஏற்படுத்தி விடுகிறது. இதனால் உடனடியாக மேற்குறிப்பிட்ட வார்டுகளில் உள்ள மழைநீர்க்கால்வாய்களில் சேர்ந்துள்ள குப்பைகள் முழுவதுமான அகற்றப்பட வேண்டும். எதிர்வரும் பருவ மழைக்காலத்தினை முன்னிட்டு அவசர அவசியம் கருதி மேற்குறிப்பிட்டுள்ள வார்டுகளில் உள்ள மழைநீர்க்கால்வாய்களில் தூர்வாரிட தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் பணிகள் மேற்கொள்ள ஆணையர் அவர்களால் முன் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மழைநீர் வடிகால்வாய்களில் கழிவுகள் அகற்றுவதற்கு விலைப்புள்ளி கோரி வெளிகொணர்வு முறையில் பணியாளர்களை பணி அமர்த்தி பணி மேற்கொண்டமைக்கும் இதற்கான ஆகும் செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது **(ந.க. எண்.2249/2020/எச்1.)**

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1267** **நாள்.05.10.2020**

**தீர்மானம் : அ) அனுமதிக்கப்பட்டது. ஆ). பதியப்பட்டது.**

---

**தனி அலுவலர் (ம) ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**